**செய்தி வெளியீடு எண்:754** **நாள்: 07.11.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

இன்று (07.11.2017) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலட்சுமி அவர்களும், சென்னை மாநகரில் அண்மையில் பெய்துவரும் பெருமழையினால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–12 ன் கீழ் வார்டு எண். 156 முதல் 167 வரையிலான வார்டுகளில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து பல்வேறு துறை அலுவலர்களுடன் ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், 12வது மண்டலத்திற்குட்பட்ட பாரதிதாசன் நகர், கண்ணன் காலனி, தில்லை கங்கா நகர் 27–வது தெரு, மாரீசன் தெரு, புவனேஸ்வரி தெரு, ஆகிய பகுதிகளில் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்பு, அதன் மீது எடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்கள். மேலும், இப்பகுதிகளில் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டதற்கான காரணங்கள் அதனை நிரந்தரமாக தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுடன் விவாதித்து அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டம் முடிவுற்ற பின், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–12ன் கீழ் வெகுவாக பாதிக்கப்பட்ட மணப்பாக்கம் பகுதி, ராமாவரம் பகுதி, அடையார் ஆறு, முன்னாள் முதல்வர் திரு.எம்.ஜி.ராமசந்திரன் அவர்களின் இல்லப் பகுதிகளை பார்வையிட்டனர். மேலும், மிகவும் பழுதடைந்த மணப்பாக்கம் பிரதான சாலை பணியைத் துரிதமாக மேற்கொள்வதற்கும் தக்க அறிவுரைகளை வழங்கினார்கள்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த பகுதி அலுவலர்கள் தொடர்ந்து பணிகளில் விழிப்புடன் ஈடுபட்டு, துரிதமாக செயலாற்ற தக்க ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டம் மற்றும் கள ஆய்வில் பெருநகர சென்னை மாநகராட்சி 12—வது மண்டல அலுவலர் திரு. சு. ராமமூர்த்தி அவர்களும், முன்னாள் ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.என்பி. வெங்கட்ராமன் அவர்களும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய பகுதி அலுவலர்கள், தமிழ்நாடு மின்வாரிய அலுவலர்கள், நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு : — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9**